கலைஞர் 100
1924 - 2023

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

சர்வதேச சிறுதானிய ஆண்டு 2023


முனைவர் மா.ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in


---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 04.03.2024

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் தேசிய அளவிலான தொழில்நுட்பக் கருத்தரங்கம்**

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் தாவர மூலக்கூறு உயிரியல் மற்றும் உயிரித்தொழில்நுட்ப மையத்தால் தேசிய அளவிலான தொழில்நுட்பக் கருத்தரங்கம் “ பயிர் மேம்பாட்டிற்கான பல் வேறு ஓமிக்ஸ் அணுகுமுறைகளின் ஒருங்கிணைப்பு ” என்ற தலைப்பில் தேசிய மாநாடு மார்ச் 4 மற்றும் 5 தேதிகளில் நடைபெற்றது . தாவர மூலக்கூறு உயிரியல் மற்றும் உயிர்தகவலியல் துறையின் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் ஏ.ஜான்ஜோயல் வரவேற்பு உரை ஆற்றினார். தாவரமூலக்கூறு உயிரியல் மற்றும் உயிரித்தொழில்நுட்ப மையத்தின் இயக்குநர் முனைவர் என்.செந்தில் மாநாட்டின் அறிமுகக் குறிப்புகளை வழங்கி, தொடக்க உரை ஆற்றினார். சிறப்பு விருந்தினர்களாக முனைவர் ஆர்.சௌதாமணி, என்சிபிஎஸ், பெங்களூரு, முனைவர் சைலேஷ்குமார், என்ஐபிஜிஆர், புதுதில்லி, முனைவர் எஸ்.மஞ்சுளா, ஆர்ஜிசிபி, திருவனந்தபுரம் சிறப்புரை வழங்கினர். தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சி இயக்குநர் முனைவர் எம்.ரவீந்திரன் தனது தலைமையுரையில் உணவு உற்பத்தியை அதிகரிக்க பயிர் மேம்பாட்டில் பல்வேறு ஓமிக்ஸ் அணுகுமுறையின் பயன்பாடுகளை மேற்கோள் காட்டினார். தாவர மூலக்கூறு உயிரியல் மற்றும் உயிர்தகவலியல் துறை பேராசிரியர் முனைவர் டி.உமா நன்றி உரை ஆற்றினார். இந்தியா முழுவதிலும் இருந்து சுமார் 200 பேர் மாநாட்டில் பங்கேற்றனர்.

மக்கள் தொடர்பு அலுவலர்